ஆஸ்பத்திரியையும் வைக்கவேண்டுமென்று ஒரு யோசனை இருந்ததே, அது கைவிடப்பட்டு விட்டதா? அல்லது, இப்போது அவாது தொகுதியை முன்னுக்குக் கொண்டுவர அதைத்திரும்ப அமலுக்கு கொண்டுவருவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : யாருடைய தொகுதி, எவருடைய தொகுதி என்பதுபற்றி பிரச்னை அல்ல. தென் சென்னையில் ஒரு பெரிய மருத்துவ மனை கட்டவேண்டுமென்று ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதற்கான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. அதுபற்றி வரைவுத் திட்டம் வரவில்லை.

திரு. ந. தருமலிங்கம் : பெரியம்மை நோய் ஆராய்ச்சிக்காக உலக சுகாதார நிறுவனம் செய்துவருகிற உதவிகளை பெற்றுவரும் இந்த நேரத்திலும்கூட. பெரியம்மை ஏற்படக் காரணம் மாரியாத்தாளின் கோபம்தான் என்று சிலர் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அப்படியானால், அந்த மாரியாத்தாள் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர் என்பதை விளக்கவேண்டுகிறேன்.

(பதில் இல்லை.)

திருமணமான பெண் நர்சுகளுக்கு வீட்டு வாடகைப்படி

* 434 வினு—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) அரசாங்க மருத்துவ மனையில் பணிபுரியும் திருமணமான பெண் நர்சுகளுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா?

(இ) இல்லையெனில், என்ன காரணம்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) திருமணமான பெண் நர்சுகள் தங்கள் கணவர், குழந்தைகளுடன் வசிப்பதற்காக நர்சு விடுதிகளை விட்டு வெளியில் தங்குவதற்கு ஆஸ்பத்திரியின் தலைமை அதிகாரியின் அனுமதிபெற்று வெளியில் தங்குகிறார்கள். அவ்வாறு தங்கள் சொந்த சௌகரியத்திற்காக குடும்பத்துடன் தங்குவதற்கு அனுமதி பெறும்பொழுது வீட்டு வாடகை அலவன்ஸ கேட்கக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில்தான் அவர்கள் வெளியில் தங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, இதுவரை அம்மாதிரி கொடுக்கவில்லையென்றாலும்கூட இனிமேலாவது அந்த விதியைத் தளர்த்தி, கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நர்ஸுகளெல்லாம் அவர்களுக்கு என்று கட்டித்தரும் விடுதிகளில் இருக்கவேண்டுமென்றுதான் நோக்கம். திருமணமானவர்களும்கூட அந்த விடுதிகளில் எல்லா வசதிகளுடனும் இருப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால், அவர்கள் திருமணமான பிறகு, தனியாகப் போக வேண்டுமென்று விரும்பினால், அவர்கள் சௌகரியத்திற்காகப் போகிறார்கள். அப்படிப் போகும்பொழுது வீட்டு வாடகை அலவன்ஸ் கேட்கக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் தான் அந்த அனுமதி வழங்கப்படுகிறது. அந்த நர்ஸுகள் அந்த விடுதிகளிலிருந்து பணியாற்றவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களுடைய சௌகரியத்திற்காக வெளியில் தங்கப்போகும்பொழுது அந்த நிபந்தனையின்

1970 மார்ச் 18]

பேரில்தான் போகிருர்கள். திருமணமான நர்ஸுகளின் கணவருக்கு தனியாக வீடு என்றிருக்கும் என்றும், அந்த வீட்டில் இவர்கள் தங்கிக்கொள்ள வசதி கிடைக்கும் என்றும் அந்த நிபந்தனை விதிக்கப்படுகிறது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவரவர்களே, கணவனுக்குச் சொந்த வீடு இல்லாத பெண்கள் அவ்வாறு வெளியே தங்கும்பொழுது அவர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் தர முயற்சிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, திருமணமானல் வெளியிலே போய்த் தங்கவேண்டும் என்று தெரிந்துதான், எதிர்பார்த்துத்தான் திருமணம் செய்துகொள்கிருர்கள். திருமணமான பிறகும் அந்த விடுதிகளில் தங்க எல்லா வசதிகளும் செய்து தரப்படும். வெளியே செல்ல வேண்டுமானல் அனுமதி பெற்றுத்தான் செல்ல வேண்டும். எனவே, அந்த நிபந்தனை விதிக்கப்படுகிறது. அது தொடர்ந்து இருந்து வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், நர்ஸுகள் தங்குவதற்கு விடுதிகள் இருக்கக்கூடிய இடங்களில் தங்க வேண்டும். இல்லையென்றல், வீட்டு வாடகை கிடையாது என்று நிபந்தனை. அப்படி விடுதிகள் இல்லாத இடத்திலே, வெளியிலே தங்கினல், அவர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்படுமா? கொடுக்கப்படுகிறதா? எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய விவரக்குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போடவும்.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், பஞ்சாயத்து யூனியன்களில், சில டிரெயினிங் பெற்ற நர்சுகள் மிட் ஒய்ஃப்களாக இருக்கிருர்கள். அவர்கள் தங்குவதற்கு வீட்டு வாடகைப்படியில்லாமல் இருக்கிருர்கள். அந்த மிட் ஒய்ஃப்களுக்கு ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸ் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றி என்ன விதிமுறை இருக்கிறது என்ற விவரக்குறிப்புகள் இல்லை. தனிக்கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவரவர்களே, திருமணமான ஆண் நர்சுகளுக்கு வீட்டு வாடகைப்படி கொடுக்கப்படுகிறது. நர்சுகள் என்றல் ஸ்டாஃப் நர்ஸ், ஆண் நர்சுகளும், பெண் நர்சுகளும் இருக்கிருர்கள். அவர்களது சர்வீஸ் அத்தியாவசிய சர்வீசாக இருக்கும் என்றும், அவர்கள் அங்கே இருக்க வேண்டுமென்றும் கருதப்படுகிறது. எனவே, திருமணமான ஆண் நர்சுகளுக்குக் கொடுக்கும்பொழுது, திருமணமான பெண் நர்சுகளுக்கு வீட்டு வாடகைப்படி இல்லாமல் இருப்பதால் போடப்பட்ட அந்த நிபந்தனையைத் தளர்த்தி, பாகுபாடு இல்லாமல் செய்ய இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றி கோரிக்கைகளைத் தந்து, வருகின்றர்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. இப்பொழுது அப்படிப்பட்ட நிபந்தனைதான் நிறைவேற்றப்படுகிறது.